# அருப்புக்கோட்டை நகராட்சி

**விளம்பி ஆண்டு ஆடி மாதம் நாள் : 03.08.2018 வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திரு.கா.சேர்மக்கனி M.Tech.,**
**தனி அலுவலர்**

**பொருள் 1 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு E, பிளாக் 3, நகரளவு எண் 56/3சி (ப), 57/1(ப), 76/1(ப), 78/1(ப), 79/1 சர்வே எண்கள் 11/2(ப), 11/3, 10/6(ப), 11/1(ப), 11/4(ப) ல் 3.79 ஏக்கர் (15335.47சமீ)பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78,172 H&UD நாள் 04.05.2017 மற்றும 13.10.2017ன்படி வரன் முறைப்படுத்த கோரி திரு.T.R.வரதராஜன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 298/2018 நாள் 04.06.2018ல் தொழில்நுட்ப ஒப்புதல் வழஙகியுள்ளார். மேற்படி தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலைகளை ஆவண எண் 3076/2014 நாள் 24.06.2014லும் பூஙகாவினை ஆவண எண் 2745/2018 நாள் 15.06.2018லும் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழஙகப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூஙகாக்களை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச்சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.5691 /2018/எப்1

**<u>தீர்மானம் :</u>**
பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது
**<u>தீர்மான எண்.471</u>**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32 இராமசாமிபுரம் காளியம்மன் கோவில் தெருவில் கம்மாய் அருகில் போடப்பட்டுள்ள மினிபவர்பம்பிலிருந்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 120m நீளத்திற்கு GI pipe line அமைத்து அதிலிருந்து 2 எண்ணம் பொதுக்குழாய் அமைத்து மக்கள் பயன்பெறுவதற்க்கும் மற்றும் motor அறை பழுதடைந்துள்ளதை சரிசெய்வதற்க்கும் ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1.00 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6713/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**
அனுமதிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.472</u>**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 17ல் கதவு எண் 367 மதுரை ரோட்டில் அமைந்துள்ள அருள்மிகு முத்துமாலை விநாயகர் திருக்கோவில் பெயர் மாற்றம் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) No.12343/2018 வழக்கறிஞர் ஊதியம் ரூ.9000/–ஐ திரு.திலீப்குமார் வழக்கறிஞர் அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.202 /2017/அ2

**<u>தீர்மானம் :</u>**
அனுமதிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.473</u>**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கடைகள் மற்றும் குத்தகை இனஙகளுக்கு 2014–2015ம் ஆண்டிற்கு சேவை வரி தொகை ரூ.4,44,171/–ஐ சொந்த கேட்பு வரப்பெற்றதை தொடர்ந்து கண்காணிப்பாளர், காவல் மற்றும் சுஙகவரித்துறை, மதுரை அவர்களுக்கு மேல் முறையீடு செய்ய கேட்பில் இருந்து 7.5 சதவீதம் மேல் முறையீட்டு தொகையாக ரூ.33,350/–ஐ சம்பந்தபட்ட துறைக்கு மேல் முறையீட்டு தொகையாக செலுத்தவும், மேற்படி மேல்முறையீடு சம்பந்தமான ஆவணஙகள் தயார் செய்த வகைக்கு உரிய செலவுத்தொகையை வழஙகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும்

அவசர அவசியம் கருதி 33,350/—யை நகர் மன்றத்தின் முன் அனுமதி பெற்று வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். ந.க.எண்.3389 /2013/அ1

<u>தீர்மானம் :</u>
அனுமதிக்கப்பட்டது.
<u>தீர்மான எண்.474</u>

**பொருள் 5 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு புழு ஒழிப்பு பணிக்காக பெறப்பட பிளிச்சிங பவுடர் மற்றும் சுண்ணாம்பு துாள் இருப்பு குறைவாக உள்ளதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி பிளிச்சிங பவுடர் 3 டன், சுண்ணாம்பு துாள் 5 டன் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அல்லது கூட்டுறவு சொசைட்டி மூலம் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1,60,000/—ஐ பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 6889/2018/எச்2

<u>தீர்மானம் :</u>
அனுமதிக்கப்பட்டது.
<u>தீர்மான எண்.475</u>

**பொருள் 6 :** விருதுநகர் மாவட்டத்தில் 15.07.2018 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 116—வது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகையினை மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரையின்பேரில் ஆணையாளர், அருப்புக்கோட்டை நகராட்சி சார்பில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் ரூ.18900/—ஐ “THINA BOOMI” நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண். 7420/2018/இ1

<u>தீர்மானம் :</u>
அனுமதிக்கப்பட்டது.
<u>தீர்மான எண்.476</u>

**பொருள் 7 :** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பட்டாபிராமர் கோவில் தெரு சர்வே எண் 168ல் கழிப்பறை கட்டக்கூடாது என அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் O.S.No.351/2003ல் 13.12.2017ல் நகராட்சிக்கு சாதகமாக பெறப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து அருப்புக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண் A.S.No.13/2018ல் திரு.ஜெயபால் மற்றும் ஒருவரால் மேல்முறையீட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.D.சங்கரன் மூலம் நடத்துவதற்கும், மேற்படி வழக்கிற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6993/2018/எப்1

<u>தீர்மானம் :</u>
அனுமதிக்கப்பட்டது.
<u>தீர்மான எண்.477</u>

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பிரிவில் கீழ்க்கண்ட 6 தற்காலிக பணியிடஙகளுக்கு 01.10.2012 முதல் 30.09.2013 வரை நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.50875/எப்3/2011, நாள்.22.01.2013ன் படி கீழ்க்கண்ட பணியிடஙகளுக்கு அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.1315, நாள்.29.07.2013ன்படி 01.10.2013 முதல் 30.09.2014 வரையிலும், இந்நகர்மன்றத் தீர்மான எண்.1675, நாள்.08.08.2014ன் படி 01.10.2014 முதல் 30.09.2015 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 2163 நாள்31.07.2015ன்படி 01.10.2015 முதல் 30.09.2016 வரையிலும், இந்நகர்மன்ற தீர்மான எண் 93 நாள் 07.04.2017ன்படி 01.10.2016 முதல் 30.09.2017 வரையிலும் மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண் 195 நாள் 07.08.2017ன் படி 01.10.2017 முதல் 30.09.2018 வரையிலும் மன்றத்தில் காலநீட்டிப்பு செய்யவும் அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

1. நகராட்சி பொறியாளர் தரம் – II – 1 பணியிடம்

2. மின்கண்காணிப்பாளர் தரம் – I – 1 பணியிடம்
3. மின்பணியாளர் தரம் – II – 1 பணியிடம்
4. பைப்லைன் பிட்டர் தரம் – II – 1 பணியிடம்
5. மீட்டர் ரீடர் – 1 பணியிடம்
6. ஜீப் ஓட்டுநர் – 1 பணியிடம்

இந்நகராட்சியிலிருந்து இருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் உள்ள திருப்புவனம் வைகையாற்றில் இருந்தும், சுமார் 120 கி.மீ. தொலைவில் உள்ள வல்லநாடு தாமிரபரணி கடலோரக் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலமும் குடிநீர் பம்பிங செய்யப்பட்டு, நகரில் ஏற்கனவே உள்ள 3 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுடன் கூடுதலாக 4 இடங்களில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் பகிர்மானக்குழாய்கள் பதிக்கப்பட்டும் குடிநீர் விநியோகம் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையை கருத்தில் கொண்டும், பொறியியல் மற்றும் குடிநீர் விநியோக பணிகளை செய்துமுடிக்க மேற்கண்ட பணியிடங்கள் அத்தியாவசியமாக உள்ளதால் அவற்றை 01.10.2018 முதல் 30.09.2019 வரை தொடர்ந்து மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து வைத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண்.2626/2011/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.478</u>**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண் 9 நேதாஜி வீதியில் இருந்து நெடுஞ்சாலை வரை செல்லும் தெருவில் தெரு விளக்கு 3 எண்ணம் அமைக்க தமிழ்நாடு மின்சார உற்பத்தி பகிர்மான கழகம், உதவிப்பொறியாளர், நகர் கிழக்கு அவர்களிடமிருந்து ரூ.71,120/– க்கு கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை SE/TANGEDCO/VNR அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 6653/2018/இ2

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.479</u>**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட குடிநீர் வாகனம் TN67B8965 வண்டியின் தகுதிச்சான்று 17.09.2018 உடன் முடிவடைவதால் தகுதிச்சான்று பெறுவதற்க்காக வாகனத்தில் உள்ள பழுது பணிகளை சரிசெய்து தகுதிசான்று பெறுவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.45,500/–யை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். 7484/2018/இ2

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.480</u>**

**பொருள் 11 :** இந்நகர் திருச்சுழி ரோடு வார்டு கு, பிளாக் 1 டி.எஸ்.எண்கள் 11/4, 12/1, 2,3,4,5,12/26 to 60, 12/62 to 12/62 to 12/77ல் 12 ஏக்கர் 45.30 செண்ட் பரப்பளவு உள்ள இடம் அங்கீகரிக்கப்பட்ட கிழக்கு விஸ்தரிப்பு நகரமைப்பு திட்டம் பாகம் ஐஜ ல் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பகுதியில் அமைந்துள்ள இடத்தினை குடியிருப்பு பகுதியாக நில உபயோகம் மாற்றம் செய்து தரக் கோரி திருமதி.சு.செண்பகாதேவி என்பவரது விண்ணப்பம் செய்துள்ளார். சூமற்படி இடத்திற்கு 24 மீட்டர் அகலமுள்ள மாநில நெடுஞ்சாலை அணுகுசாலையாக உள்ளது. மேற்படி இடத்திற்கு வடக்கு பக்கம் குடியிருப்பு கட்டிடங்களும், கிழக்கு பக்கம் வணிகக் கட்டிடங்கள் மற்றும் குடோன் கட்டிடங்களும், மேற்கு பக்கம் வாகன எரிபொருள் நிரப்பும் இடம் மற்றும் குடியிருப்பு கட்டிடங்களும் தெற்கு பக்கம் மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான திருச்சுழி ரோடும் உள்ளது. எனவே மேற்படி இடத்தை கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை பகுதியில் இருந்து குடியிருப்பு

பகுதியாக நில உபயோகம் செய்து தரக்கோரி வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களுக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களுக்கு வழியாக பரிந்துரை செய்து அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.6782/2018/எப்2

**<u>தீர்மானம் :</u>**
அனுமதிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.481</u>**

**பொருள் 12** : இந்நகர் பைபாஸ்ரோடு மேற்கு வார்டு F, பிளாக் 10, டி.எஸ்.எண்.6/2Bல் உள்ள 2239 சமீ பரப்பரவு கொண்ட இடம் அங்கீகரிக்கப்பட்ட கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தி திட்டம் பாகம் 2ல் பொது உபயோகப் பயன்பாட்டிலிருந்து வணிகப் பயன்பாட்டிற்கு நில உபயோகம் மாற்றம் செய்து தரக் கோரி வரப்பெற்ற திரு.நாராயணசாமி என்பவரது விண்ணப்பம் மன்றத்தின் அனுமதிக்கு

மேற்படி இடம் அங்கீகரிக்கப்பட்ட கிழக்கு விஸ்தரிப்பு விரிவு அபிவிருத்தி திட்டம் பாகம் 2ல் பொது உபயோகப் பயன்பாட்டில் அமைந்துள்ளது. மேற்படி இடத்திற்கு கிழக்கே ஒடையும் அதற்கடுத்து மனுதாரரின் மனைவிக்கு சொந்தமான இடமும் அதற்கடுத்து தேசிய நெடுஞ்சாலையும், வடக்கே காலி இடமும், கல் பட்டறையும், மேற்கே காலி இடமும் தெற்கே அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவும் அதில் குடியிருப்பு கட்டிடங்களும் அமைந்துள்ளது.

எனவே மேற்படி பொது உபயோகப் பயன்பாட்டில் இருந்து வணிகப் பகுதியாக நில உபயோகம் செய்து தரக்கோரி வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வழியாக நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்து மேலனுப்பலாம்

ந.க.எண்.7703/2018/எப்1

**<u>தீர்மானம் :</u>**
அனுமதிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.482</u>**

**பொருள் 13** : 1920ம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 124 ன் கீழ் ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை தொழில்வரி விகிதத்தினை 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை 01.10.2018 முதல் உயர்வு செய்யப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 21.05.2018ம் நாளிட்ட கடித ந.க.எண்.12503/2018/ஆர்1ன் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மத்திய மாநில அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனஙகள், பள்ளிகள், கல்லூாரிகள் மற்றும் வஙகிகள் ஆகிய இதர தொழில்புரியும் நிறுவனஙகளுக்கு 01.10.2018 முதல் 30 சதவீதம் உயர்வு செய்ய இந்நகர் மன்ற தீர்மான எண் 425, நாள் 11.06.2018ல் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. மேலும் அட்டவணையில் வரிசை எண் 6ல் உள்ள தொழில்வரி தொகை அதிகப்படியாக உள்ளதால் அதற்கு மட்டும் 30 சதவீதம் உயர்வு செய்யப்படாமல் அதே தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 28.07.2018 அன்று திருத்தியமைக்கப்பட்ட தொழில்வரி அறிக்கையினை தினசரி நாளிதழில் 30 நாட்கள் கால அவகாசத்துடன் வெளியிடப்பட்டு பொது மக்களிடம் இருந்து ஆட்சேபனை ஏதும் வரப்பெறாத நிலையில் ஏற்கனவே 11.06.2018ம் தேதிய நகர்மன்ற தீர்மான எண் 425ல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி தொழில்வரி நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2517/2018/அ2

**<u>தீர்மானம் :</u>**
அனுமதிக்கப்பட்டது.
**<u>தீர்மான எண்.483</u>**